வேண்டிய அவசியம் இப்போது இல்லை. கேட்டிருக்கிற கேள்வி, ரோபாட் தயாரிக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று கேட்டு இருக்கிறார்கள். அப்படி ஒரு திட்டமே இல்லை என்று நான் பதில் தெரிவித்து இருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்விக்கு இப்போது இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 233, திரு ஏ. ரவிக்குமார், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

233--

பொன்னேரியில் ஆற்றில் அனுமதியின்றி மணல் எடுப்போர் மீது நடவடிக்கை

***16573--திரு. ஏ. ரவிக்குமார்:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பொன்னேரியில் ஆற்றில் அனுமதி பெறாமல் மணல் எடுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்,

(ஆ) அனுமதியின்றி முறைகேடாக மணல் எடுப்பதைத் தடுக்க சைதாபேட்டை சார் ஆட்சியர், பொன்னேரி வட்டாட்சியர், சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் விழிப்புடனும் முனைப்புடனும் செயல்பட அறிவுரைகள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், அவ்வப்போது திடீர் தணிக்கைகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய தணிக்கைகள் மூலம் அனுமதியின்றி முறைகேடாக மணல் எடுப்பதை அறவே தவிர்க்க முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொன்னேரி தொகுதியிலுள்ள சின்னகாவனம், பெரும்பேடு, சீமாவரம், பள்ளிபுரம், ஜெகன்னாதபுரம், ஆத்தூர், எருமைவெட்டிபாளையம், புதுக்குப்பம், பூதூர், வடக்குநல்லூர் போன்ற

இடங்களில், ஆற்றில் அனுமதியின்றி சட்டவிரோதமாக லாரிகளில் சமூகவிரோதிகள் மணலை எடுத்துச் செல்கின்றார்கள். குறிப்பாக, பாலங்கள், அணைக்கட்டுகள், கரைகளின் ஓரங்கள் போன்ற இடங்களில் இப்படி சட்டவிரோதமாக மணல் எடுப்பதால், வெள்ளக் காலங்களில் அதிகமான அளவிற்கு பாதிப்பு ஏற்படுகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், தற்போது நடவடிக்கை எடுத்தாலும் ஓரளவிற்குத்தான், சுமார் 10 சதவீத அளவிற்குத்தான் தற்போது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. முழுவதுமாகக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது திட்டங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கின்றாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் உள்ள குசஸ்தலை மற்றும் ஆரணி ஆறுகளில், குறிப்பாக குசஸ்தலை ஆற்றில், காரனோடை, அழிஞ்சிவாக்கம், ஜெகன்னாதபுரம், இனாம்அகரம், நெற்குன்றம், செக்கஞ்சேரி, எருமைவெட்டிபாளையம், குதிரைப்பள்ளம் ஆகிய கிராமங்களிலும், ஆரணி ஆற்றில் பொன்னேரி மற்றும் சொட்டு பனப்பாக்கம் ஆகிய கிராமங்களிலும் சட்டவிரோதமாக மணல் எடுப்பதை அறிந்து, இதனைத் தடுப்பதற்காக அடிக்கடி அலுவலர்கள் திடீர் தணிக்கைகள் செய்து, தமிழ்நாடு சிறு கனிமங்கள் சலுகை விதியின்படி, அனுமதியின்றி மணல் எடுக்கும் வாகனங்களைக் கைப்பற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. 1992-93-ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் எண்ணிக்கை மற்றும் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகைகளாவன: 1.1.92 முதல் 31.10.93 வரை 283 லாரிகளும் வாகனங்களும் பிடிக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 5,32,321/-. மேலும் இதுபோன்ற சட்டவிரோதமான செயல்கள் நடக்கின்றபோது அதிகாரிகள் மட்டும் இதனைத் தடுத்துவிட முடியாது. பொது மக்களும், குறிப்பாக பொதுமக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களுடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் சட்டவிரோதமான இச்செயல்களைத் தடுக்க முடியும். மாண்புமிகு திரு. ரவிக்குமார் அவர்களுடைய பகுதியில் இது போன்ற சட்டவிரோதமான செயல்கள் நடைபெறுகின்றபோது, அதைத் தடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதற்கு சற்று ஒத்துழைப்புத் தந்தால் நிச்சயமாக இதுபோன்ற சட்டவிரோதமான செயல்களைத் தடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 8]

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இப்படி பல்வேறு முறை மணல் எடுக்கிறார்கள் என்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடமும் புகார் செய்த உடன், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எடுத்துச் சொல்லி நடவடிக்கை எடுத்ததற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும் அதிகாரிகள் வருவதை எப்படியாவது முன்கூட்டியே தெரிந்துகொண்டு இவர்களில் பெரும்பாலானவர்கள் தப்பித்து விடுகிறார்கள். எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கூட, இப்படிச் சட்டவிரோதமாக மணல் எடுப்பவர்கள் மீது குண்டர்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியும், இதனை முழுவதுமாக ஒழிக்க முடியவில்லை. இதனால் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு சூழ்நிலைகளைச் சந்திக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இதனை முழுவதுமாகக் கட்டுப்படுத்துவதற்கு பொதுப்பணித் துறை, வருவாய்த் துறை, தொழில் துறை ஆகிய மூன்று துறைகளும் ஒன்றாக சேர்ந்து ஏதாவது சிறப்புத் திட்டத்தை வைத்திருக்கிறீர்களா அல்லது பிரதான சாலைகளாகிய திருவொற்றியூர்-பொன்னேரி சாலை மற்றும் ஜி.என்.டி. சாலை போன்ற சாலைகளில் செக்-போஸ்ட் அமைத்து இதைத் தீவிரமாகக் கண்காணித்து இதனைக் கட்டுப்படுத்துவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மணல் எடுக்கின்றபொழுது சில குறிப்பிட்ட பகுதிகளில் எடுக்கக் கூடாது என்று ஒரு விதியிருக்கிறது. அந்த விதியை அனுசரித்து மணல் எடுப்பதற்கு உரிய சட்டபூர்வமான அனுமதியை வழங்கிவிட்டால் இதுபோன்ற சட்டவிரோதமாக மணல் எடுக்கின்ற செய்கைகள் தடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொன்னேரி பக்கத்திலேயிருக்கிற குசஸ்தலையாற்றின், சோழவரம் பகுதியிலேயிருக்கின்ற காரனோடையிலே மிகப்பெரிய பாலம் திடீரென்று இடிந்து விழுவதற்கு காரணம் அங்கே அனுமதியின்றி கோர்ட் ஆர்டர் பெற்று மணலை எடுத்தார்கள். அதனாலே அந்த மிகப்பெரிய பாலம் இடிந்து விழுந்தது. அப்படி இடிந்து விழுவதற்குக் காரணமானவர்கள் மீது ஏதாவது நடவடிக்கையெடுக்கப்பட்டதா? எழில்மிகு சென்னை

2000 என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். நிறைய மணல் தேவைப்பட்டுக் கொண்டிருக்கிறது. செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலேயிருந்துதான் அத்தனை மணலையும் நாம் சென்னைக்குக் கொண்டு வர வேண்டும். அதற்காக அரசாங்கமே டென்டர் விட்டு மணல் எடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் கூறியதற்குத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். மணல் எடுக்கிற உரிமையை அளிக்கின்றபொழுது சில பிரச்சினைகளை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. மணல் எடுக்கின்ற உரிமையை அளிக்கின்றபொழுது ஒன்று அந்த இடத்தில் விவசாயத்திற்குப் பயன்படுகின்ற நீரூற்றுகள் பாதிக்கப்படுகிறதா என்பதை அறிய வேண்டும். அடுத்து, பக்கத்திலேயிருக்கிற தண்ணீர்த் தொட்டி, பாலம் இதுபோன்ற பகுதிகளிலேயிருந்து சற்றுத்தள்ளியெடுத்தால்தான் அதுபோன்ற தண்ணீர்த் தொட்டிகள், பாலங்கள் எல்லாம் பாதிக்கப்படாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் கூறிய யோசனையைப்போல அரசு விரைவிலே அதற்குத் தக்க முடிவெடுத்து சட்டபூர்வமான அனுமதியை நாங்கள் வழங்கவிருக்கிறோம். அப்பொழுது இதுபோன்ற பிரச்சினைகள் எழாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 234, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

234–

மேட்டூர் தொகுதி, செக்கானூரில் அருந்ததியர்களுக்குக் குடியிருப்பு வழங்குதல்

**35375–திருமதி செ. சுந்தராம்பாள்:*

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, நவப்பட்டி பஞ்சாயத்து, செக்கனூரில் வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் மின்துறையால் தொழிலாளர்களுக்கென்று கட்டப்பட்டு தற்போது காலியாக இருக்கும் 60 குடியிருப்புகளை அருந்ததியர்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், செக்கானூர் கிராமத்தை ஒட்டியுள்ள பாலமலைக் காப்புக்காட்டிலுள்ள வன நிலத்தில், கீழ் மேட்டூர் நீர்மின் நிலையத்